Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 38

சனிக்கிழமை
03 ஜனவரி 2026

மார்கழி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மருதங்கேணி படுகொலை; சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜன. 3
வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் நபரொருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அந்தப் படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக »11

திஸ்ஸ விகாரைக் காணி

# இப்போதும் என் பொறுப்பிலேயே; மக்களுக்கு வழங்கத் தயார்!



நயினை விகாராதிபதி பரபரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 3
தையிட்டி திஸ்ஸ விகாரையின் பூர்வீக காணி எனது கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது. அதை, மக்களுக்கு வழங்கி, இந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு நான் தயார் - இவ்வாறு நயினாதீவு விகாராதிபதி ஸ்ரீ நவடகல பதும கீர்த்தி திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். »10

## கட்டம் கட்டமான விடுவிப்பு மக்களை ஏமாற்றும் திட்டம்

கீர்த்தி திஸ்ஸ தேரர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை கட்டம் கட்டமாக விடுவிப்பது என்பது மக்களை ஏமாற்றும் தந்திரம் - இவ்வாறு »11

## எதிர்பாரா தருணத்தில் புத்தர்சிலை வரும்!

பெரும் சதிச்செயல் உள்ளது
நயினை விகாராதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு புத்தர்சிலை கொண்டு வரப்படாது என்று தற்போது கூறப்பட்டிருந்தாலும், எதிர்பாராத நேரத்தில் அந்தச் »11

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக இன்று பெரும் போராட்டம்!

பாதுகாப்பு ஏற்பாடுகள் உச்சம்

யாழ்ப்பாணம், ஜன. 3
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தியும், திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராடிய நபர்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட பலப்பிரயோகத்தைக் கண்டித்தும் இன்று போராட்டம் »11

## மக்களின் போராட்டங்களுக்கு தடைபோடக்கூடாது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜன. 3
திஸ்ஸ விகாரை அமைப்பதற்காக இடம்பெற்ற ஆக்கிரமிப்பால் காணிகளை இழந்த மக்கள் போராட்டத்தான் செய்வார்கள். அவர்களின் போராட்டத்துக்கு பொலிஸார் தடைபோடக் கூடாது என்று நயினை விகாராதிபதி ஸ்ரீ நவடகல பதும கீர்த்தி திஸ்ஸ »10

## வினைத்திறனான நிதிச்செலவு வடக்கு மாகாணம் முதலிடம்!

விரிவு பக்கம்:-11

## அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் கள்ளமௌனம்

அமைச்சர் சந்திரசேகர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 3
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில், ஈழத் தமிழ்க் கட்சிகளுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றஞ்சாட்டியுள்ளார். »11



அத்துமீறிய மீன்பிடி

## இந்திய மீனவர்கள் பதினொருவர் கைது



யாழ்ப்பாணம், ஜன. 3
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தமிழக மீனவர்கள் 11 பேர் ஸ்ரீலங்கா கடற் »11

ஜனாதிபதித் தேர்தல்

## சரியான தருணத்தில் வேட்பாளர் அறிவிப்பு

நாமல் 'கடும் சஸ்பென்ஸ்'



கொழும்பு, ஜன. 3
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென்பது உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்று, அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- »11

முச்சந்தி முரளி




## கிணற்றுக்குள் இருந்து தம்பதியர் சடலமாக மீட்பு

வவுனியாவில் சோகம்

வவுனியா, ஜன. 3
வவுனியா கனகராயன்குளம் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து கணவனும் மனைவியும் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.
22 வயதுடைய இளம் குடும்பத்தலைவரும், 19 வயதுடைய மனைவியுமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். சடலங்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் »10

## 11 சதவீதத்தால் மின்கட்டணம் எகிறும்

மின்சாரசபை நடவடிக்கை என பயனர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 3
மின் கட்டணத்தை 11 வீதத்தால் அதிகரிப்பதற்கு மின்சாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என மின்சார பயனர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.
மின்சார பயனர்கள் சங்கத்தின் செயலாளர் சஞ்சீல தம்மிக இது தொடர்பில் தெரிவித்ததாவது:-
மின்கட்டணத்தை 11 வீதத்தால் அதிகரிப்பதற்கு உரிய யோசனை மின்சாரசபையால் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
கடந்த ஒரு வருடத்தில் மின்சாரசபையால் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற் றப்பட வில்லை. தற்போது »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 02.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4304 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 05 34 59 76 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 02.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1371 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 10 28 44 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0330 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 7 5 0 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 02.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2410 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 15 29 39 62 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 02.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6062 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 4 2 7 2 3 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 02.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2092 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 48 71 72 78 |
| விசேட எழுத்து | Z |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 02.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0178 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 17 46 |

# அச்சுறுத்தும் மோசமான சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சி!

## கிறிஸ்தவ பாதிரிமார், செயற்பாட்டாளர்கள் கரிசனை

**கொழும்பு, ஜன.3**

**கருத்துச் சுதந்திரத்தையும் நபர்களின் தனியுரிமையையும் அச்சுறுத்தலுக்குள் தள்ளக்கூடிய பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் மிக மோசமான சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றும் கிறிஸ்தவ பாதிரிமார்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் 61 பேர் கூட்டாகக் கரிசனை வெளியிட்டுள்ளனர்.**

தற்போது நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்' எனும் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அதுபற்றிய கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு தொடர்பில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் (கிறிஸ்தவர்கள்) அடங்கிய 61 பேரின் கையெழுத்துடன் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பிவைத்துள்ள மனுவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அடக்குமுறைச் சட்ட வடிவங்களை நீக்குவோம் என வெளிப்படையாக வாக்குறுதி அளித்திருந்த நிலையில், இவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கும் தற்போதைய அரசுக்கும் நெறியியல் மற்றும் அறநெறிசார் சட்டபூர்வத்தன்மை இல்லை என்பது தெளிவாகியுள்ளது என்றும் அவர்கள் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 02.01.2026 | வெள்ளிக்கிழமை | 0770 |
| DLB ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| T | 7 9 9 2 4 2 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 02.01.2026 | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3036 | E | 09 43 46 55 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 02.01.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 33 60 61 73 | 5197 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 02.01.2026 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0866 | 10 28 50 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 02.01.2026 | வெள்ளிக்கிழமை |
| தனு | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 20 22 24 59 | 4748 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| | | திகதி | தினம் |
| | | 02.01.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 27 | 14 35 39 42 | 2212 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 02.01.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 29 43 44 72 | 2862 |

# இ.போ.ச பஸ்களிலும் டிஜிற்றல் கட்டண முறை

கொழும்பு, ஜன.3

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துளில் டிஜிற்றல் இ-பஸ் கட்டணமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாத இறுதியில் தனியார் பேருந்துளில் இந்தக் கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது மாகும்புர மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து செல்லும் பேருந்துளுக்கு மாத்திரமே இந்தக் கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விரைவில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் இயந்திரங்களை அனைத்துப் பேருந்துளுக்கும் பெற்றுக்கொடுத்து நாடு முழுவதும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# ஊடகங்கள் மீது கைவைத்தால் வீதியில் இறங்கிப் போராட்டம்!

## *ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை*

கொழும்பு, ஜன.3

ஊடகங்கள்மீது கைவைப்பதற்கு அரசாங்கம் முற்பட்டால் அதற்கு எதிராக மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கிப் போராடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எச்சரித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தோல்விப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. அதனிடம் தெளிவான வேலைத்திட்டம் இல்லை. அதை ஊடகங்கள் வெளிப்படுத்தும்போது ஊடக நிறுவனங்களுக்கு ஆளுங்கட்சியால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. ஊடகங்கள்மீது கைவைக்கும் அரசாங்கங்கள் எல்லாம் நிச்சயம் கவிழும்.

கடந்தகாலங்களில் அவ்வாறு நடந்தும் உள்ளது. ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வழங்கிய பிரச்சாரத்தால்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்று ஊடகத்துறை அமைச்சர் ஊடகங்களைப் பகிரங்கமாக எச்சரிக்கும் நிலை காணப்படுகின்றது. நாம் ஊடக சுதந்திரத்துக்காக எப்போதும் முன்னிலையாவோம். எனவே, ஊடக நிறுவனங்களை அச்சுறுத்துவதற்கு அரசாங்கம் முற்பட்டால் மக்களுடன் வீதிக்கு இறங்கிப் போராடுவோம்- என்றார். (எ-44)

# அபராதத்தால் ரூ.285 மில்லியன் ஈட்டியது நுகர்வோர் அதிகாரசபை

கொழும்பு, ஜன.3

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் இருந்து நுகர்வோர் விவகார அதிகாரசபை ரூ.285 மில்லியனுக்கும் அதிகமான அபராதங்களை வசூலித்துள்ளது.

2025ஆம் ஆண்டில் நாடு முழுவதும் நடத்தப்பட்ட 21,000 சோதனைகளைத் தொடர்ந்து இந்த அபராதங்கள் விதிக்கப்பட்டதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

# கணக்காய்வாளர் நாயகம் இல்லாது ஊழலற்ற அரச நிர்வாகம் நடக்காது

## விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

சுயாதீன கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்காமல் ஊழல் மோசடியற்ற வகையில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாது. தகுதியற்ற ஒருவரின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைக்கும்போது அதை நிராகரிக்கும் அதிகாரம் அரசமைப்புப் பேரவைக்கு உண்டு என்று முன்னாள் நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு அரசியற்கட்சிகளின் முகவர்களையோ அல்லது அரசியல்வாதிகளையோ நியமிப்பதைத் தடுக்கும் வகையில் அரசமைப்பில் புதிய சட்ட திருத்தங்களை உருவாக்கியுள்ளோம். கணக்காய்வாளர் நாயகம் பதவி வறிதாக்கப்பட்டு பல மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், சுயாதீன தேசிய கணக்காய்வாளர் பதவிக்கு இன்றளவில் தகுதியான ஒருவர் நியமிக்கப்படவில்லை.

ஜனாதிபதியின் நியமனத்தை அரசமைப்புப் பேரவை தொடர்ச்சியாக நிராகரிப்பதை அலட்சியப்படுத்தமுடியாது. ஜனாதிபதி சிறந்த ஒருவரின் பெயரைப் பரிந்துரைத்து இந்த பிரச்சினைக்கு அரசமைப்பின் ஊடாகத் தீர்வுகாணவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற மருந்து மரணங்களால் மருத்துவர்களுக்கும் நெருக்கடி!

மருத்துவர் பிரசாத் கொலம்பகே விசனம்

**கொழும்பு, ஜன.3**

**தரமற்ற மருந்துகளால் நோயாளர்கள் உயிரிழந்துள்ளமையால் மருத்துவமனைக் கட்டமைப்பில் பணியாற்றும் மருத்துவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். நோயாளர்களுக்கான மருந்துகளைப் பரிந்துரைக்கும்போது அதன் தரம் தொடர்பில் இருமுறை சிந்திக்க வேண்டியுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே விசனம் வெளியிட்டுள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தரமற்ற மருந்துகளால் நோயாளர்களின் உயிருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. மருந்துகளின் தரம் தொடர்பான கருத்துகளை அரச தரப்பு தவிர்த்துவருவதுடன், பொறுப்புக்கூறலிலிருந்தும் விலகியுள்ளது. மருத்துவர்களை நாட்டில் தக்கவைத்துக்கொள்ள 'இலங்கை விசேட மருத்துவ சேவை' என்ற புதிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று நாம் முன்வைத்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. எனினும் செயற்பாட்டு ரீதியான எந்த முன்னேற்றங்களையும் நாம் காணவில்லை. சுகாதாரசேவைசீரழிவதையோ அல்லது இந்தத் துறை முறிவடைவதையோ நாம் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. சுகாதார சேவையைப் பாதுகாக்கத் தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயங்கப்போவதில்லை-என்றார். (எ-இ)



## அம்மாச்சி உணவகம் வவு.வில் புதுப்பொலிவு

வவுனியா,ஜன.3

வவுனியா அம்மாச்சி உணவகம் புனரமைப்புப் பணிகளின் பின் மீண்டும் திறக்கப்பட்டது. வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள வடக்கின் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி புனரமைப்புப் பணிகளுக்காக கடந்த சில நாள்களாக பூட்டப்பட்டிருந்தது. இந்தநிலையில் புனரமைப்பு பணிகள் முடிவடைந்த நிலையில் நேற்று மீண்டும் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ. சரத்சந்திர மற்றும் விவசாயத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-110)

## மருத்துவர்கள் வெளியேற்றம் 200 கோடி ரூபா நிலுவை!

தேசிய கணக்காய்வில் தகவல்

கொழும்பு, ஜன.3

இலங்கையிலிருந்து உரிய அனுமதியின்றி வெளிநாடுகளுக்குச் சென்ற 705 மருத்துவர்கள், அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறியதன் மூலம் சுமார் 200 கோடி ரூபா நிதியை அரசாங்கத்துக்குச் செலுத்தத் தவறியுள்ளதாகத் தேசிய கணக்காய்வு அலுவலகம் கண்டறிந்துள்ளது.

உயர்கல்வி மற்றும் விசேட பயிற்சிப் படிப்புகளுக்காக அரசாங்கத்தின் செலவில் வெளிநாடுகளுக்குச் செல்லும் மருத்துவர்கள், அந்தப் பயிற்சியை முடித்த பிறகு மீண்டும் இலங்கைக்குவந்து குறிப்பிட்ட காலம் சேவையாற்றவேண்டும் என்பது கட்டாய ஒப்பந்தமாகும். அவ்வாறு வெளிநாடு சென்ற 705 மருத்துவர்கள், ஒப்பந்தத்தை மீறி மீண்டும் நாட்டுக்குத் திரும்பாமல் அங்கேயே தங்கியுள்ளனர்.

நிலுவைத்தொகை: இவர்களுக்காக அரசாங்கம் செலவிட்ட தொகை மற்றும் ஒப்பந்த மீறலுக்கான அபராதம் உள்ளிட்ட சுமார் 200 கோடி ரூபாவை அவர்கள் இதுவரை அரசாங்கத்துக்கு மீளச்செலுத்தவில்லை. இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சுகாதார அமைச்சு போதிய அக்கறை காட்டவில்லை எனத் தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)


## தையிட்டி விகாரைக்கு எதிராக பிரிட்டனிலும் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜன.3

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பிரிட்டனிலும் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற அமைதிவழிப் போராட்டத்தைப் பொலிஸார் அராஜகமாக அடக்கியதுடன், ஐவரைக் கைதுசெய்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்தும், சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை அகற்றக்கோரியும் இன்று தையிட்டியில் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று பிரிட்டனிலும் கண்டனப் போராட்டம் இடம்பெறவுள்ளது. டவுனிங் ஸ்ரீட், லண்டனில் உள்ளூர் நேரம் மதியம் 2மணி முதல் 4 மணி வரை போராட்டம் நடைபெறவுள்ளது. (எ-100)



## உடுத்துறையில் கரையொதுங்கிய மர்மப்பொருள்

யாழ். வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படிக் கடற்கரைப் பகுதியில் மர்மப்பொருள் ஒன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்று மற்றும் கொந்தளிப்பால் குறித்த பொருள் கரைக்கு அடித்துவரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதுகுறித்து பாதுகாப்புத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (க-27)

## புதினம் தெரியுமோ?

### மாறாத மாற்றம்

ஆப்பிழுத்த குரங்கின்ர கதையைக் கேள்விப் பட்டிருப்பியள். மரம் ஒண்டைப் பிளக்கிறதுக்காக அதுக்க ஆப்பை வைச்சுட்டு, வேலைக்காரர் சாப்பிடப் போட்டினம். அந்தநேரம் அங்க வந்த குரங்கொண்டு சும்மா கையை வைச்சுக்கொண்டிருக்காமல், மரத்தில இறுக்கின ஆப்பை இழுத்துப் பார்த்திருக்கு. ஆப்பு வெளியில வர, பிளந்து கிடந்த மரத்துக்க குரங்கின்ர வால் மாட்டுப்பட்டு, அப்பிடியே செத்துப்போட்டுது. அந்தக் குரங்கு மாதிரி சும்மாயிருக்க முடியாமல், தேவையில்லாத வேலை பார்த்து மாட்டுப்பட்டு முழிக்கிறவையத்தான் ஆப்பிழுத்த குரங்கு மாதிரி எண்டு சொல்லுறவை. கோத்தாபய தன்ரபாட்டில பேசாமல் இருந்திருந்தால், அஞ்சு வருசமும் அவர்தான் ஜனாதிபதியா ஆட்சியில இருந்திருப்பார். ஆனால் 'செயற்கைப் பசளைக்குத் தடை மாதிரி' சில தீர்மானங்களை எடுக்கப்போய், அது பிள்ளையார் பிடிக்க வெளிக்கிட்டு குரங்காக மாறி, கடைசியில அவரை ஆட்சியில இருந்தே கலைச்சுப் போட்டுது.

இப்ப திசைகாட்டி அரசாங்கமும் அதேமாதிரி ஒரு தீர்மானத்தை எடுத்ததால ஆப்பிழுத்த குரங்கு மாதிரி முழிசிக்கொண்டிருக்குது. கல்விமுறையை மாத்துறதும், பள்ளிக்கூட நேரத்தைக் கூட்டுறதும்தான் அந்தத் தீர்மானம். உண்மையில இது நல்ல தீர்மானம் தான். அரைச்சமாவை அரைக்கிறமாதிரியான, புளிச்சுப் போன பாடமுறைக்குப் பதிலா இப்பத்த உலகத்துக்கு ஏத்தமாதிரி, வெளிநாடுகளில இருக்கிற மாதிரி, பிள்ளையளின்ர உளவியலுக்கும் பொருந்தக்கூடிய புதுக்கல்வித்திட்டம் தான் இப்ப நாட்டுக்குத் தேவை. அதைத்தான் திசைகாட்டிக்காரரும் செய்ய வெளிக்கிட்டவை. முக்கியமா எப்பிடியும் எங்கட உழுத்துப் போன கல்விமுறையை மாத்தியே ஆகோணும் எண்டு ஒற்றைக்காலில நிக்கிறது பிரதமர் ஹரிணிதான். ஆனால் "ஆரைக்கேட்டு இப்பிடி முடிவெடுப்பீங்கள்? என்னெண்டு ரீச்சர்மாரைக் கேக்காமல் பள்ளிக்கூட நேரத்தைக் கூட்டுவீங்கள்?" எண்டு எல்லாப்பக்கமும் கடும் எதிர்ப்பு. உண்மையில இந்த எதிர்ப்புக்குப் பின்னால கனக்கக் காரணங்கள் இருக்கு. இனிமேல் பாடப்புத்தகங்களுக்குப் பதிலா பிள்ளையளுக்கு 'மொடியூல்ஸ்' எண்டு ஒவ்வொரு பாடத்துக்கும் பாட அட்டையள் தான் குடுப்பினம். அதில தான் படிக்கிறது எழுதுறது எல்லாமே. அதோட இனிமேல் உந்த மொடியூல்ஸ் செய்யிறதை வைச்சுத்தான் மார்க்ஸும் போடப் போயினம். எக்ஸாமுக்கு இனிமேல் கொஞ்ச மார்க்ஸ்தான். அதால உந்த ரியூசன் கலாசாரமே பெரிய அடி வாங்கப்போகுது. இனிமேல் பள்ளிக்கூடத்தில கூட மினக்கெட்டால்தான் பிள்ளையள் கூட மார்க்ஸ் எடுக்கலாம். இப்பிடிப் புதிசா வரப்போற கல்வித்திட்டத்தால தங்கட தொழிலுக்கு அடிவிழப் போகுது எண்டு ரியூசன் காரர் தான் ரீச்சர்மாரைத் தூண்டிவிட்டு, எதிர்ப்பைக் காட்டுகினமாம். இதால அரசாங்கமும் என்ன செய்யிறதெண்டு யோசிச்சுக் கொண்டிருக்காம். ரீச்சர்மார் எதிர்த்தால், கல்வித்திட்ட மாற்றத்தை ஒழுங்கா கொண்டுவர ஏலாதெல்லோ. எண்டாலும் முன்வைச்ச காலைப் பின்வைச்சாலும் மரியாதை இல்லை.

இப்பிடியான இக்கட்டில இருந்து அரசாங்கத்தை பிணை எடுத்திருக்கு டித்வா சேதங்கள். உந்தச் சேதத்தில இருந்து சனங்கள் மீளும் வரை, பழைய நேரப்படி தான் பள்ளிக்கூடங்கள் இயங்குமெண்டும், ஆனால் இனிமேல் எட்டுப் பாடங்களுக்குப் பதிலா ஏழுபாடம் தான் நடக்கும் எண்டும் அரசாங்கம் அறிவிச்சிருக்குது. ஒரேயடியா மாத்தினால் தான் எதிர்ப்பு வருமெண்டதால, மெல்ல மெல்ல ஒவ்வொரு மாவட்டமா பள்ளிக்கூட நேரங்களை அரசாங்கம் மாத்திற பிளானில இருக்குதாம். எப்பிடியோ கோத்தா மாட்டினமாதிரி இவையளும் மாட்டுப்படாமல், எல்லாம் நல்லதா நடந்தால் சரிதான் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2026 ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## இடபம்

சுற்றியிருப்பவர்கள் என்ன நினைப்பார்களோ, ஏது நினைப்பார்களோ என்றெல்லாம் யோசிக்காமல் மனதில் பட்டதைப் பளிச்சென்று பேசிவிடும் நீங்கள், எப்போதும் உண்மையின் பக்கம் நிற்பவர்கள்.

உங்கள் ராசியிலேயே இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். வருங் காலத்துக்கான முன்னேற்பாடுகளைச் செய்துகொள்ள நல்ல வாய்ப்புகள் அமையும். பக்குவமாகப் பேசி பல காரியங்களைக் கச்சிதமாக முடித்துக் காட்டுவீர்கள். எனினும் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். நேரம் கிடைக்கும் போது உடற்பயிற்சி, நடைபயிற்சி செய்தால் நலமாக இருக்கும். தம்பதிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவரையொருவர் புரிந்து கொள்வீர்கள். வீட்டில் தடைபட்ட சுபகாரியங்கள் அடுத்தடுத்து நடக்கும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 2ஆம் வீட்டில் நிற்பதால் சாதுர்யமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். சொத்து மற்றும் புது டிசைனில் நகை வாங்குவீர்கள். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 3ஆம் வீட்டுக்கு செல்வதால் சேமிப்புகள் கரையக்கூடும். அதே சமயம் வராது என்று நினைத்திருந்த பணமும் கைக்கு வரும்.

14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 4ம் வீட்டுக்கு செல்வதால் தம்பதிக்குள் விட்டுக் கொடுத்து போகவும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். சொத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். தாயாரின் ஆரோக்கியம் பாதிக்கும். சிலர் வீடு மாறுவீர்கள்.

1.1.2026 முதல் 16.1.2026 வரை உங்கள் ராசிக்கு 8ம் வீட்டில் செவ்வாய் மறைவதால் வீடு, மனை வாங்குவதில் கவனம் தேவை. சகோதர வகையில் அலைச்சலும், மனக் கசப்பும் வந்து விலகும். 2.9.2026 முதல் 6.11.2026 வரை மற்றும் 22.11.2026 முதல் 31.12.2026 வரை 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால் தம்பதிக்குள் விட்டுக்கொடுத்து போவது நல்லது.

இந்த வருடம் முழுவதும் சனி பகவான் லாப வீட்டிலேயே தொடர் வதால் திடீர் பணவரவு உண்டு. சொந்த வீடு வாங்குவீர்கள். வருமானம் உயரும். சிலர் புதுத் தொழில் தொடங்குவீர்கள். டிசெ.4 ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் கேது நிற்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை அதிகரிக்கும். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் இருக்கும். 10ஆம் வீட்டில் ராகு நிற்பதால் உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடி வரும்.

ஒருபக்கம் வேலைச்சுமையும் இருக்கும். டிச.5ஆம் தேதி கேது 3ஆம் இடத்துக்கு வருவதால் மனக்கவலைகள் விலகும். இனி உற்சாகத்துடன் இருப்பீர்கள். 9இல் ராகு அமர்வதால் மற்றவர்களை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைக்காமல், நீங்களே முடிப்பது நல்லது.

இல்லத்தரசிகளுக்கு சுயதொழில் செய்ய வங்கி கடன் கிடைக்கும். கன்னிப் பெண் களுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும். தள்ளிப் போன கல்யாணம் கூடி வரும். மாணவ மாணவிகளுக்கு மறதி, மந்தம் நிலை மாறும்.

வியாபாரிகளுக்கு அதிரடியாக இலாபம் கிடைக்கும். வாராக் கடன்கள் வசூலாகும். அனுபவமிகுந்த வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். புகழ்பெற்ற நிறுவனங் களுடன் புதிய ஒப்பந்தங்களை செய்து கொள்வீர்கள். உணவு, துணி, ரியல் எஸ்டேட் வகைகளால் இலாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் முன்னேற்றம் உண்டு. பங்குதாரர்கள் உங்களைப் புரிந்து கொள் வார்கள்.

உத்தியோகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். அதிக சம்பளத்துடன் பெரிய நிறுவனத்திலிருந்து வாய்ப்புகள் தேடி வரும்.

எதிர்பார்த்தபடி பதவி உயர்வு,சம்பள உயர்வு எல்லாம் உண்டு. கணினி துறையில் இருப்பவர்களுக்கு அயல் நாட்டுத் தொடர்புடைய புதிய நிறுவனங்களில் நல்ல சம்பளத்துடன் வாய்ப்பு கிடைக்கும். கலைத் துறையினருக்கு அரசாங்கத்தால் பரிசு, பாராட்டு கிட்டும்.

மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, உங்களின் வாழ்க்கைத் தரத்தை ஒருபடி மேலே உயரச் செய்வதாக அமையும்.

**பரிகாரம்: மகாலட்சுமி துர்க் கையை அமாவாசை திதியில் எலுமிச்சம்பழ தீபம் ஏற்றி வணங்குங்கள். எதிலும் வெற்றி**

# திருவாதிரை இன்று!

யாழ்ப்பாணம், ஜன.3

திருவெம்பாவைத் திருவிழாவின் இறுதி நாளான திருவாதிரை திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

திருவெம்பாவை திருவிழாவை முன்னிட்டு மயிலிட்டி வீரமாணிக்கத் தேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்மன் கோவிலில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

10 ஆம் நாளான திருவாதிரை திருவிழாவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து மங்களவாத்திய இசையுடன் திருவூஞ்சல் இடம்பெறும். தொடர்ந்து உள்வீதி உலா இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும். (ச-100)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் புதிய ஆண்டின் முதலாவது பிரதோஷ உற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)



வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் புதுவருடத் திருப்பலி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்தந்தை சூசை மாணிக்கத்தினால் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர். திருப்பலியின் இறுதியில் கடற்பகுதி அருட்தந்தையால் ஆசிர்வதிக்கப்பட்டது. (ச-41-27)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**கடகம்:** காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிரமுகர்களின் அறிமுகமும் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள் வார்கள். எதிர்பாராத பணவரவும் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பெருமை உண்டாகும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் வகையில் திடீர் செலவுகள் ஏற்படும்.

**கும்பம்** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். ஆதரவு தருவார்.

**மீனம்** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## செம்மணியில் ஏன் மதச்சாயம்?

யாழ்ப்பாணம்-செம்மணி வளைவுப் பகுதியில், அசைவ உணவகங்கள் -விடுதிகள் - விருந்தகங்கள் என்பவற்றை அமைப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை எனத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது நல்லூர்ப் பிரதேசசபை. நல்லூரானின் செம்மணி வளைவு மற்றும் சிவலிங்கங்கள் அங்கு இருப் பதால், ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணுவதாகக் குறிப்பிட்டு இந்த முடிவை எடுத்திருக்கின்றது அந்தச் சபை. நடுவீதியில் ஒரு மத அடையாளத்தை வைத்துவிட்டு, அதைக் காரணமாகக் குறிப்பிட்டு கட்டுப்பாடுகள் விதிப்பதும்-தடைகளை ஏற்படுத்துவதும் அபத்தம். அத்தகைய பிறழ்வான தீர்மானத்தையே நல்லூர்ப் பிரதேச சபை எடுத்திருக்கின்றது.

நல்லூர் ஆலய வளாகத்துக்கு அண்மித்திருந்த ஒரு அசைவ உணவகத்துக்கு எதிராக அண்மையில் போர்க்கொடி தூக்கப்பட்டமையும், பின்னர் அந்த உணவகம் அசைவ நிலையில் இருந்து மாற்றம் பெற்றமையும் அனைவரும் அறிந்ததே. இந்தச் செயற்பாடு எவ்வளவுதூரம் ஜனநாயகத் தன்மையுள்ளது என்பதற்கு அப்பால், இதில் ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால், தற்போது செம்மணியில் தடைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகள் அவ்வாறானவை அல்ல. ஒருசில வருடங்களுக்கு முன்னர் கட்டாந்தரையாக இருந்த அந்த நிலங்களில், திடீரென வளைவுகளையும் தெய்வ அம்சங்களையும்திணித்துவிட்டு, கட்டுப்பாடுகளை விதிப்பதென்பது பிற்போக்குத்தனமானது. ஒரு நாட்டின் - நிர்வாக அலகின் பிரதான கடமைகளில், மதச்சார்பின்மையை உறுதிப்படுத்துவதும் முக்கியமானது. அதுவே உண்மையான அபிவிருத்தியாகவும் நல்லிணக்கமாகவும் அமையும். அந்த எண்ணம் சிங்கள மக்கள் மத்தியில் இல்லாத காரணத்தால்தான் இத்தனை சீரழிவுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தனிப்பட்ட மதங்களுக்கும், மதச்சின்னங்களுக்கும் ஏற்ப சட்டமும் சமூகங்களும் வளைக்கப்படக்கூடாது என்று நாங்கள் போர் புரிகின்றோம். ஆக, பௌத்த பேரினவாதம் எத்தகைய மனோநிலையில் இந்தத் தீவை உட்கொள்கிறதோ, அதே மனோநிலைதான் நல்லூர்ப் பிரதேசசபையின் தீர்மானத்தில் வெளிப்பட்டிருக்கின்றது. அதிகாரங்களுக்கு ஏற்ப தீர்மானங்களின் வீச்சு வேறுபடுகின்றது. அவ்வளவே.


யாழ்ப்பாணத்தில் கோவில்கள் இல்லாத வீதிகளும் இல்லை - தெருக்களும் இல்லை. எனவே, தெய்வ அம்சங்களைக் காரணமாகக் குறிப்பிட்டு இத்தகைய தீர்மானங்களை எடுத்தால், எந்தவொரு இடத்திலும் அசைவ உணவகங்களை திறக்கவேமுடியாது. அனைத்து மதங்களும் எம்முடையவை. அதேபோல், அனைத்தும் அவரவர் தனிப்பட்ட நம்பிக்கைக்குப் பாத்திரமானவை. அந்த நம்பிக்கை, இத்தகைய தீர்மானங்கள் மூலமே 'திணித்தல்' என்றநிலையை அடைகின்றது. இந்த நிலைமை காலப்போக்கில் மதப் பதற்றங்களுக்கும் - மோதல்களுக்கும்-முறுகல்களுக்கும்-அவமதிப்புகளுக்கும் வித்தாக அமைந்து விடும். போர்தின்ற இந்தப் பூமியில் செய்ய வேண்டிய எத்தனையோ பயன்தரு விடயங்கள் இருக்கையில், உள்ளாட்சி சபைகள் இவ்வாறான தேவையற்ற விடயங்களில்காலத்தையும்-கருத்தையும்-நேரத்தையும்-உழைப்பையும் செலவிடுவது அறமல்ல.



### பொய்யாமொழி

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்**

**பொருள் :** மலர் போன்ற மனத்தில் நிறைந்தவனைப் பின்பற்றுவோரின் புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்துநிற்கும்.




## வாழ்க்கைத்தரம் குறைந்த நாடு பட்டியலில் இலங்கை 2ஆம் இடம்

**கொழும்பு, ஜன.3**

**உலகில் வாழ்க்கைத்தரம் குறைந்த நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்கான உலகின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்த நாடுகளின் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.**

இந்தத் தர வரிசையில் நைஜீரியா முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இலங்கை இரண்டாம் இடத்தையும், பங்களாதேஷ் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

கொள்வனவு இயலுமை, வீடுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை, வாழ்க்கைச்செலவு, பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து நேரம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் அடிப்படையில் இந்த வாழ்க்கைத் தரச் சுட்டி கணிக்கப்பட்டு தர வரிசை வெளியிடப்பட்டுள்ளது. உலகின் சிறந்த வாழ்க்கைத்தரத்தைக் கொண்ட நாடுகளின் வரிசையில் நெதர்லாந்து, டென்மார்க் மற்றும் லக்ஸ்சம்பேர்க் ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன. (எ-இ)



## மூவர் கொலை

கொழும்பு, ஜன.3

மாவெனெல்ல - கொந்தெனிய பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மூவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இரண்டு பெண்களும், ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 52, 57 மற்றும் 66 வயதுடையவர்களாவர். சம்பவம் தொடர்பில் 33 வயதான ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் சந்தேகநபர் மன நலம் பாதிக்கப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## 106 கிலோவுக்கு மேற்பட்ட போதைப்பொருள் அழிப்பு

கொழும்பு, ஜன.3

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட 106 கிலோ 248 கிராம் ஹெரோய்ன் மற்றும் 90.5 கிராம் அபின் போதைப்பொருள்கள் நேற்று அழிக்கப்பட்டன. இந்த போதைப்பொருள்கள் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் பொறுப்பேற்கப் பட்டு புத்தளம், வனாதவில்லுப் பகுதியில் நிறுவப்பட்ட எரியூட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு அழிக்கப்பட்டன. (ச-இ)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் சாவு!

கொழும்பு, ஜன.3

கடுவலை - கொரதொட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இருவரும் ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## நெல் கொள்வனவுக்காக சலுகைக் கடன் திட்டம்!

கொழும்பு, ஜன.3

சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டியிலான கடன் வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய பெரும்போக பருவத்தில் நெல் கொள்வனவு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்தக் கடன் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் ஆண்டுக்கு 7 சதவீத சலுகை வட்டி விகிதத்தில் அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபா வரை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை** ஞாயிற்றுக்கிழமை - மார்கழி 19

04.01.2026


சுபநேரம் : 09.31 - 11.01

ராகுகாலம் : 05.01 - 06.31




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவிப் பிரதேச செயலாளர்



யாழ்ப்பாணம், ஜன.3
நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துக்குப் புதிய உதவிப் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சிவதுரை றஜிந்தன் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்து யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் எதிர்வரும் திங்கட்கிழமை நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (ச-66)

# ரணிலுடன் இணைய தயாரில்லை சஜித்!



### முன்னாள் அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 3
ரணிலுடன் இணைந்து பயணிப்பதற்கு சஜித் விரும்பமாட்டார் என்று முன்னாள் அமைச்சர் அஜித் மானப்பெரும தெரிவித்துள்ளார்.
ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ஓரணியில் இணைந்து பயணிப்பதற்கு அண்மைக்காலமாக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. சஜித் தலைவர், ரணில் தலைமை ஆலோசகர் என்ற அடிப்படையில் இந்த இணைவு சாத்தியப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இவ்வாறான நிலையிலேயே, இந்த இணைப்புக்குச் சாத்தியம் இல்லை என்று முன்னாள் அமைச்சர் அஜித் மானப்பெரும தெரிவித்துள்ளார். 'ஒன்றிணைந்து செயற்படும் திட்டங்களில் சஜித்துக்கு உடன்பாடு இல்லை. அவரிடம் அத்தகைய தலைமைத்துவம் இல்லை. சஜித் எப்போதும் தனித்துச் செயற்படுவதையே விரும்புபவர்' என்று மானப்பெரும மேலும் கூறியுள்ளார்.
கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழேயே அஜித் மானப்பெரும வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். எனினும், கடைசி நேரத்தில் தேர்தலில் இருந்து விலகி, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம44)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.3
கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது என்று ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ.நகுல நவராஜ உமாபதீஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். சிறப்பான முறையில் திருவாசகம் ஓதும் சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

★★★★

யாழ்., ஜன.3
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச)

**வேலை ஆட்கள் தேவை**

* உதவியாளர்

தொடர்பு:
**0777 76 35 33**

(CS 28783) A

**சமையலாள் தேவை**

சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள கூல் வாறிற்கு றொட்டி,றைஸ் மற்றும் பலகாரங்கள் போடக்கூடிய சமையல் ஆள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**077 515 7894**
**070 363 2074**

**வேலையாட்கள் தேவை**

சுத்திகரிப்பு நிறுவனம் ஒன்றுக்கு யாழ் நகரை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் ஆண், பெண் வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு: **077 220 95[illegible]**

(CS 60361) E

# பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 06 . 1946



மறைவு 20 . 12 . 2010

## அமரர் பஞ்சலிங்கம் செல்வராஜா

(சாரதி, DI இ.போ.ச)
திதி: பூரணை (03.01.2025)

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே...
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே...
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவரே
இன்னும் சில காலம் எங்களோடு வாழ மறந்ததேன் ?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அனைந்து ஆண்டுகள் பதினைந்து உருண்டோட
எங்கள் மனம் உங்களை தேடி நிற்கிறது

மில்லேன், ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(CS/60355) J-1

**குடும்பத்தினர்**

# பெறுகை அறிவித்தல்
# நகராட்சி மன்றம், சாவகச்சேரி

தலைவர் பெறுகைக் குழு நகராட்சி மன்றம். சாவகச்சேரி அவர்களினால் 01.02.2026 ஆம் திகதி தொடக்கம் 31.12.2026 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கீழ்வரும் சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குனரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. பாதுகாப்புச் சேவையின் விபரம்:

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை பகல், இரவு (12hrs Per Day) | கேள்விப் பிணை வைப்பு/ (மீளளிக்ககூடியது) (ருபா) | | கேள்வி பத்திரக்கட்டணம் (மீளளிக்கப்படாதது) |
|---|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் | |
| NP/14/41(3)/1/SES /2026 | பாதுகாப்புச் சேவை | 11 | 110,000.00 | 08.05.2026 | 2000.00 |

02. வைப்புக்கள்:
பெறுகைக்கான வைப்புத்தொகையை சாவகச்சேரி நகராட்சி மன்ற வருமான பிரிவில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படாத பெறுகை மனுதாரர்களுக்கு பெறுகைகளுக்கான ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

03. வியாபாரப் பதிவு சான்றிதழ்:
பெறுகைப் பத்திரம் கோரும் நிறுவனங்கள் வியாபாரப் பதிவுப் படிவத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வடமாகாணத்தில் நிரந்தரப் பதிவினைக் கொண்டிருத்தல் அல்லது தொடர்பு கொள்ளக்கூடிய தமது கிளை அலுவலகத்தினையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

04. அனுபவ சான்றிதழ்:
கடந்தகால. நிகழ்கால அனுபவச் சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பாதுகாப்புச்சேவை வழங்கும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான வலுவிலுள்ள அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. வரி:
உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் வரிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளுக்கும் சகல வரி செலுத்தல்களுக்கும் ஒப்பந்ததாரர் உட்படுதல் வேண்டும்.

06. கூலி வீதங்கள்:
1. பாதுகாப்பு சேவை ஊழியர்களினுடைய ஆகக்குறைந்த சம்பளமானது சம்பள சபையினால் நிர்ணயிக்கப்படும் கூலி வீதத்துடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும்.
2. கூலி வீதங்கள் உட்பட சித்தியடைவதற்கான தகைமைகளை ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் கொண்டிருக்குமிடத்து சேவையின் தரம் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

07. பெறுகைப் படிவங்கள் / ஆவணங்கள்:
பெறுகை ஆவணங்கள் 03.01.2026 ஆம் திகதி தொடக்கம் 22.01.2026 ஆம் திகதி வரை அலுவலக கடமை நேரத்தில் காலை 9.00மணி முதல் பி.ப 3.00மணி வரை சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பெறுகைப் படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் மூலப்பிரதி, நகல் பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

08. பெறுகைகள் விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரியும் இறுதித் திகதியும்:
சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் "தலைவர், பெறுகைகள் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் அல்லது சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படுவதன் மூலம் 23.01.2026 மு.ப 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கப்பெறல் வேண்டும். கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்புச்சேவை 2026" என குறிப்பிடல் வேண்டும். பெறுகைகள் வைப்புத்தொகையை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை பெறுகைப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

09. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 09.01.2026 ஆம் திக்தி மு.ப 10.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆஉ வமுள்ள கேள்விதாரஉ கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

10. தொழிற்சட்டங்கள்:
ETF, EPF பங்களிப்புக்கள் உட்பட தொழிற்திணைக்கள நடைமுறைகளுக்கு இணங்கி செயற்படல் வேண்டும்.

11. பெறுகைகள் திறத்தல் மற்றும் தீர்மானம்:
பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் பெறுகைப்பத்திரங்கள் 23.01.2026 அன்று மு.ப 10.30 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும்போது சமூகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.மேற்படி பெறுகை கோரல்களை இரத்து செய்யவோ, நிறுத்திவைக்கவோ, பகுதியாக வழங்குவதற்கோ, புதிதாக கோருவதற்கோ சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு பூரண அதிகாரமுண்டு. பெறுகை தொடர்பான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களை 0212270806 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
03.01.2026

(CS 46822) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 05 . 1935



மறைவு 02 . 01 . 2026

### பத்மாவதி பாலகிருஷ்ணன் ஆச்சாரி

பருத்தித்துறையை பிறப்பிடமாகவம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி பாலகிருஷ்ணன் ஆச்சாரி அவர்கள் நேற்று (02.01.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வையாபுரி பாலகிருஷ்ணன் ஆச்சாரி அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சாம்பசிவம் - நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வையாபுரி - காந்திமதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், அமரர் சண்முகராஜா ஆச்சாரி, அமரர் குகராஜா ஆச்சாரி, சுப்பிரமணியம் ஆச்சாரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சசிகலா, நிர்மலா (ஜேர்மன்), ஶ்ரீதரன் (தம்பா), முரளிதரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (பிரான்ஸ்), அரிகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இளங்கோ (ஜேர்மன்), திலகவதி (பிரான்ஸ்), ஜெயந்தி (பிரான்ஸ்), சுகந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சண்மதி, வைஷ்ணி, மதுசா, சந்தோஷ், ஆதித்தியன், அட்சயா, அபிஷேக், யஸ்வினி, சபரீஸ் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தொடர்பு:**
**077 9906 041**
**077 4893 320**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28757) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1946



மறைவு 01 . 01 . 2026

### வேலுப்பிள்ளை செல்லையா

குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும், கண்டாவளை, விசுவமடு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லையா அவர்கள் நேற்றுமுன்தினம் (01.01.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாறிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மழவராயர் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் இராசம்மா, இராசரத்தினம் (ரத்தினம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரகுமார் (சுவிஸ்), சந்திரலேகா (சுவீடன்), சந்திரவதனா (ஆசிரியர், யா/சாவகச்சேரிசக்தி அம்மன் த.க பாடசாலை), சந்திரகாந்தன் (லண்டன்), சந்திரலோஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வரதி (சுவிஸ்), கருணாநிதி (சுவீடன்), சிவநாவலன் (அதிபர், யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), புஸ்பவதனி (லண்டன்), கேசவன் (மருந்து கலவையாளர், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரணிகா (சுவிஸ்), சுஜன் (சுவிஸ்), சங்கீர்த்தனன் (சுவீடன்), பிரணவி, காலஞ்சென்ற பரணிதன் மற்றும் யாதவி (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சோபிதன் (லண்டன்), லிதுஜா (லண்டன்), சுவேதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை மு.ப 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

பரமேஸ்வரி : 077 205 5615, சிவநாவலன் : 077 157 7712
சந்திரவதனா : 077 442 7206, சந்திரலோஜி : 076 833 3798
கேசவன் : 077 500 3798


(CR/46827) J-1

## நீங்கா நினைவலைகள்



**சுப்பிரமணியம் மணிதரன்**

தோற்றம் 16.06.1974 மறைவு 25.08.2023



**சுப்பிரமணியம் மணிபத்மன்**

தோற்றம் 06.02.1961 மறைவு 06.02.2024



**சுப்பிரமணியம் மணிசேகரன்**

தோற்றம் 12.03.1972 மறைவு 23.11.2024

ஒரு கொடியில் பூத்த மலர்களே நீங்கள் ஓராண்டுக்குள் செல்ல - முன்
ஓடிப்போக நினைத்ததேனோ...? உலகில் எங்கு சென்றாலும்
உங்களுடன் இருந்த நிம்மதி எங்கும் கிடைக்க முடியாது...
நாம் அன்பாக சேர்ந்து வாழ்ந்த மகிழ்ச்சியான நினைவுகள்
எங்களை துடிக்கவைக்கின்றது...
உலகெங்கும் தேடுகின்றோம் உங்கள் ஆன்மாக்களை...
நாமும் உங்களிடம் வரும் வரை எங்கள் தேடல் தொடரும்...

எமது இல்லத்தில் இன்று (03.01.2026) சனிக்கிழமை ஆத்ம சாந்தி பிராத்தனையும்
அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம்பெறும்.

**மடத்தடி வீதி, கொடிகாமம்.** **உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்**

(CR 48826) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

## 2026 ஆம் ஆண்டிற்கான குத்தகை வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கூறலும் 2வது கேள்வி கோரலும்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் மற்றும் மத்திய பேரூந்து நிலைய கடையினை (மக்கள் வங்கி அருகாமை) 2வது கேள்வி கோரல் மூலம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரலும் கோரப்படுகின்றன.

பற்றுச்சீட்டு வழங்கப்படும் காலம் :- 05.01.2026 மு.ப 9.00 மணி தொடக்கம் 09.01.2026 பி.ப 02.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)
ஏலம் கூறப்படும் இடம் :- கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகம்
ஏலம் கூறப்படும் நேரம் :- 12.01.2026 முற்பகல் 10.30 மணி

**ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நியந்தனைகள்**

1. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. முதலாம் சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் வாடகை இருப்பின் வருட வாடகைத் தொகையின் 1/3 பகுதியையும் 13.01.2026 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை, வாடகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். தவறின் அடுத்த தர சித்திதாரர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்படும். அவர்கள் பெற்றுக் கொள்வதாயின் சம்மதக் கடித்தினை 14.01.2026 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பு சமர்பிக்கப்பட வேண்டும் . அவர்கள் குத்தகை மற்றும் வாடகை இருப்பின் குத்தகை, வாடகைத் தொகையின் 1/3 பகுதியை 14.01.2026 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் குத்தகை ,வாடகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரத்தினை பெற விரும்புவோர் வடக்கு மாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஏலத்தில் பங்குபற்றும் ஏலதாரர் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட ஏதத்தில் மட்டும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.
4. ஏனைய நிபந்தனைகள் உதயன் நாளிதளின் 07.11.2025 ஆம் திகதிய பத்திரிகையில் உள்ள எமது சபை கோள்வி கோரல் நிபந்தனைகளே. அல்லது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும். தொலைபேசி இல :- 021 - 2290001

**பகிரங்க ஏலம் கோரப்படும் கடைகள் மற்றும் பொதுச் சந்தைகள்**

| இல | பொதுசந்தை குத்தகை மற்றும் இறைச்சிக்கடை விபரம் | ஏலத்தில் பங்குபற்றுவதற்கான கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | | |
| 1 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 18,000.00 | 1,701,900.00 | 5,000.00 |
| 2 | முல்லைத்தீவு கருவாட்டுக் கடை | 2,000.00 | 1,000.00 | 72,981.00 | 5,000.00 |
| 3 | முல்லைத்தீவு கடற்கரை சிற்றூண்டிச் சாலை | 2,000.00 | 5,000.00 | 427,770.00 | 4,500.00 |
| 4 | சிலாவத்தை பொதுச்சந்தை | 2,000.00 | 1,200.00 | 109,799.10 | - |
| முள்ளியவளை உப அலுவலகம் | | | | | |
| 5 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 25,000.00 | 2,547,000.00 | 2,700.00 |
| 6 | தண்ணீரூற்று கருவாட்டுக் கடை | 2,000.00 | 500.00 | 20,655.81 | 2,700.00 |
| 7 | முள்ளியவளை மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 13,000.00 | 1,215,000.00 | 3,150.00 |
| 8 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 1,500.00 | 126,000.00 | 1,500.00 |
| 9 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 2,000.00 | 30,000.00 | 2,754,810.00 | - |
| 10 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 34,200.00 | - |
| செம்மலை உப அலுவலகம் | | | | | |
| 11 | குமுளமுனை மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 1,200.00 | 100,810.17 | 1,750.00 |
| 12 | செம்மலை பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 22,050.00 | - |
| 13 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 8,910.00 | - |
| கொக்கிளாய் உப அலுவலகம் | | | | | |
| 14 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 6,000.00 | 510,390.00 | 1,000.00 |
| முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | | |
| 15 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிகடை | 2,000.00 | 1,000.00 | 93,150.00 | 1,000.00 |
| 16 | முள்ளிவாய்க்கால் கோழியிறைச்சிக் கடை | 2,000.00 | 500.00 | 41,400.00 | 1,000.00 |
| 17 | முள்ளிவாய்க்கால் பொது சந்தை | 2,000.00 | 500.00 | 2,296.35 | - |

**2வது கேள்வி கோரல்**

| இல | கடை விபரம் | படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | முல்லைத்தீவு பேருந்து நிலைய கடை (மக்கள் வங்கி அருகாமை) | 2,000.00 | 9,500.00 | 934,749.69 | - |

**தவிசாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு**
**03.01.2026**

(CR 46825) E

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## திருமதி நாகலிங்கம் சரஸ்வதி
திதி : 03.01.2026

அன்பின் இலக்கணமாய் என் அம்மா
பாசத்தின் உறைவிடமாய் என் அம்மா
பண்பின் சிகரமாய் என் அம்மா
பத்தினி தெய்வமாய் என் அம்மா
நான் வாழ தம் வாழ்வை
அற்பணித்த தெய்வமே
தாமின்றி தனியாக என் செய்வேன்
என் அன்னையே

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அத்தியடி, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்**

(CS/60351) J-1

# இதய அஞ்சலி

**கமலாதேவி கனகபாபதி**

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தலைவர்,
**திரு ஆ. சிவநாதன்** அவர்களின் சகோதரி,

## கமலாதேவி கனகசபாபதி

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா தில்லைக்கூத்தன் திருவடியில் சாந்திபெற பிரார்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

அறங்காவலர் - நிர்வாகி உறுப்பினர்கள்
மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி

(CS 60353) E

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 09.02.1961 — **மறைவு** 02.01.2026

## செல்வராஜா சர்வலோஜினி

கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா சர்வலோஜினி அவர்கள் நேற்று (02.01.2026) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகளும், சபரட்ணம் செல்வராஜா (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், சுகுமாரன், கமலலோசினி, மீனாலோசினி, நந்தகுமார் (கனடா) ஆகியோரின் சகோதரியும், வினோஜா, அனோஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்சன், தவரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அக்ஷயா, கோஷிகா, தனுஷியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செல்வராஜா (கணவர்)**
**தர்ஷன்,தவரஞ்சன் (மருமக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 01 . 1940 — மறைவு 01 . 01 . 2026



## திருமதி சண்முகராஜா பாலபரமேஸ்வரி

வடமராட்சி கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா பாலபரமேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (01.01.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராஜா (ஸ்தாபகர் குளோபல் கொமினிகேஷன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகதாஸ், மற்றும் வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆதித்தன் (லண்டன்), அரவிந்தன் (தமிழர் விடுதலைக் கூட்டணி), அச்சுதன் (கனடா), பாமா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவரஞ்சினி, சுதர்ஜினி, அனுசியா, சுந்தரலிங்கம் (கண்ணன் - கணபதி மில்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்ஷ்வின், தனிஷ்கா, ஹரிசன், சயனிதா, பிரகவி, அஸ்வின், அர்வின், அஸ்னி, ரதுர்ஷன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

கணபதி மில், கொற்றாவத்தை
தொ. இல: 0776179076 (மருமகன் சுந்தரலிங்கம்)
0771949252 (மகன் அரவிந்தன்)
0212263882

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 01 . 1940 — மறைவு 31 . 12 . 2025



## வெற்றிவேல் பொன்னம்மா

யாழ். தெல்லிப்பளை துர்க்காபுரத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேல் பொன்னம்மா அவர்கள் கடந்த 31.12.2025 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தகுட்டி - தெய்வானை தம்பதியரின் மகளும், சண்முகம் - பூதாத்தை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வெற்றிவேல் அவர்களின் அன்பு மனைவியும், கெங்காதேவி, குகன், கெங்காதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பார்வதி, முருகேசு, சரஸ்வதி, லட்சுமி, சின்னத்தங்கம் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயரட்ணம், தகீரா, கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கோபி, றொபி, சுஜீவன், சாகீசன், அன்ஜய், அனி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், வீரா, இயல் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு லண்டனில் உள்ள Jack Carter Pavilion இல் இடம்பெற்று, மதியம் 12.00 மணிக்கு Forest park cemetery & Crematorium எனும் இடத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மகன் - கெங்காதரன்**
**T.P: 0044 7985219871**

(CS 28788) A

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 04 . 1958 — மறைவு 02 . 01 . 2026



## ஜெயகுமாரி அருட்சிவம்

ஏழாலை மேற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஜெயகுமாரி அருட்சிவம் அவர்கள் நேற்று (02.01.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரி - சிவசம்பு தம்பதியரின் அன்பு மகளும், முத்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயசன், ஜெசிந்தன், அபிராமி, ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபஞ்சலா, ஜெனிற்றா, நிசாந் ஆகியோரின் அன்பு மாமியும், ஆகர்ஷன், அஸ்விதா, நக்ஷத்திரா ஆகியோரின் பேர்த்தியும், அமரர் சோதிலிங்கம்-ஞானாம்பிகை, தேவலிங்கம்-ஜெயரத்தினம், ஜெயகௌரி தேவி-கனகசபாபதி, விஜயகுமாரி- பரமேஷ்வரன், சுகாகாந்தன்-புவனேஷ்வரி, சுகந்தினி-பரமேஷ்வரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்திஒடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 4633 778

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(CS 28757) A

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1947 — மறைவு 31 . 12 . 2025



## திருமதி சுந்தரலிங்கம் பரமேஸ்வரி

சீனிவாசகம் வீதி, கொட்டடியை பிறப்பிடமாகவும் ஓட்டுமடம், ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் பரமேஸ்வரி அவர்கள் கடந்த 31.12.2025 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - அன்னலட்சுமி தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், சசிகலா, சுவர்ணா, கார்த்திகா, காலஞ்சென்ற கவாஸ்கர் மற்றும் திவாகர் ஆகியோரின் அன்புத் தாயாரும், குகாணந்தன், ஜீவகுமார், சத்தியசீலன், சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியும், றஜீவன், ஜென்சி, சஜீவன், அபர்ணா, கோபிநாத், அக்ஷியா, அஜீவ், அஸ்வின், அபிநயா, அபிலாஷா, அக்ஷனா, அஸ்விகா, விதுஷிகா, கௌதமன், கபிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆராத்தியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 5061 438**
**076 5493 498**

மயிலு வீதி, ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

(CS 28786) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சிப் பகுதிகளில் எளிமையான முறையில் நத்தார்க் கொண்டாட்ட நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. (ச-41-100)



நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி இரணைமடுக்குளத்துக்குச் சென்று ஆராய்ந்தார். நன்னீர்மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், வெள்ள அனர்த்தத்தின் பின்பு மீனவர்களின் தொழில் நடவடிக்கையின் பாதிப்புத் தொடர்பாகவும் மீனவர்களிடம் கேட்டறிந்து கொண்டார். (ஏ-41-113)




ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலில் 'க்ளீன் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் இரண்டாவது நடமாடும் சேவை வேலைத்திட்டம் நேற்று நடைபெற்றது. குறித்த நடமாடும் சேவை கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நடமாடும் சேவையில் பல்வேறு சேவைகள், மக்களுக்கு ஒரே நாளில் முன்னெடுக்கப்பட்டன. (ச-113)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் 336ஆவது மார்கழி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)



## இறந்தவர்களின் நினைவாக பஸ்தரிப்பிடம் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கடந்த வருடம் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த தாய் மற்றும் குழந்தையின் நினைவாக விபத்து நடைபெற்ற இடத்தில் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அவர்களது குடும்பத்தினரால் இந்தப் பேருந்துத் தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டுதிறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நத்தார் தினத்தில் கணவன், மனைவி, இரண்டு பிள்ளைகளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை டிப்பர் வாகனம் மோதியதில் இரண்டு வயதுச் சிறுமி சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

மற்றைய மூவரும் காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சையின் போது தாயாரும் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-113)



## உயிர்காப்பு அங்கிகள் மீனவர்களுக்கு வழங்கல்

கிளிநொச்சி, ஜன.3

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீனவர்களுக்கான உயிர்காப்பு அங்கிகள் பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திடம் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின்கீழ், பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட16 கடற்றொழிலாளர் சங்கங்களினைச் சேர்ந்த 584 மீனவர்களுக்கு 2 மில்லியன் ரூபா பெறுமதியான உயிர்காப்பு அங்கிகள் வழங்கப்பட்டன. (ச-41-9)

### மக்களின்...

தேரர் தெரிவித்துள்ளார். ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணிகளை இழந்த மக்களின் போராட்டம் நியாயமானது. அவர்களின் பக்கம் நியாயம் உள்ளதால்தான் அந்த மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று நான் தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வருகின்றேன். பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், காணிகளை இழந்த மக்கள் மேற்கொள்ளும் போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்துகொள்ளுங்கள். அவர்களின் காணிகளை ஒப்படைத்தால் எதற்காகப் போராடப் போகின்றார்கள்? எனவே, போராட்டங்களுக்குத் தடைபோடுவதை விடுத்து, மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

### இப்போதும்...

மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அமைத்துள்ள திஸ்ஸ விகாரையையும், திஸ்ஸ விகாரையின் பூர்வீக காணியையும் நாகவிகாராதிபதி நேற்று நேரில் பார்வையிட்டார். அத்துடன், விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் காணிகளை இழந்த மக்களுடனும் கலந்துரையாடல் நடத்தினார்.

இதன் பின்னர் அவர் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:

தையிட்டி திஸ்ஸ விகாரை உண்மையில் மக்களின் காணிகளை ஆக்கிரமித்தே அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிகளை இராணுவத்தின் துணையுடன் ஆக்கிரமித்தமையும், அதில் விகாரை அமைத்தமையும் மகாதவறு. இது புத்தரின் போதனைக்கு முரணான நடவடிக்கை.

திஸ்ஸ விகாரைக்கு என சொந்தமாகக் காணிகள் உள்ளன. அந்தக் காணிகள் எனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளன. திஸ்ஸ விகாரைக்கென சொந்தமாகக் காணிகள் உள்ளபோது, மக்களின் காணிகளை ஆக்கிரமிக்க வேண்டிய தேவை என்ன?

எனினும், விகாரையை தற்போது இடித்து அழிக்க முடியாது. விகாரையை மட்டுமல்ல, எந்தவொரு வழிபாட்டுத் தலங்களையும் இடித்து அழிக்க முடியாது. எனவே, விகாரைக்காக எனது கட்டுப்பாட்டில் உள்ள காணியின் அளவுக்கு நிகரான காணியை திஸ்ஸ விகாரையைச் சூழ எடுத்துக்கொண்டு, எனது கட்டுப்பாட்டில் உள்ள பூர்வீக காணியை மக்களுக்கு வழங்க நான் தயாராக உள்ளேன். மக்களின் காணிகளும், விகாரைக் காணியும் அருகருகில் உள்ளதால், இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும்.

இந்த விடயம் எனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விடயம் என்பதால், என்னுடன்தான் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், என்னைத்தவிர அனைவருடனும் பேசுகின்றனர். என்னுடன் இந்த விடயம் உரையாடப்படவில்லை - என்றார். (அ-ம-26)

### கிணற்றுக்குள்...

கொண்டு செல்லப்பட்டுள்ளன. தவறான முடிவெடுத்து அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று, முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதங்கேணி...

நபருக்கு நீதிமன்றம் விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்துள்ளது.
புதுவருட தினமான நேற்றுமுன்தினம் மருதங்கேணிப் பகுதியில் சின்னையா தவநேசன் (வயது-40) என்ற நபர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டார். விசாரணைகளைத் தீவிரப்படுத்திய பொலிஸார், அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரை பிரதான சந்தேகநபராகக் கைதுசெய்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தினார்கள். இதையடுத்தே, அந்த நபரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-100)

## கட்டம்...

நயினாதீவு விகாராதிபதி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விகாரைக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகளை கட்டம் கட்டமாக விடுவிப்பதாகக் கூறியுள்ளனர். ஏன் இவ்வாறு கட்டம் கட்டமாக விடுவிக்க வேண்டும்? அவை மக்களின் காணிகள். இதை அரசாங்கமே ஏற்றுள்ளது? ஆவணங்களும் அவ்வாறே உள்ளன. மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதில் எதற்காக கட்டம் கட்டமான நடவடிக்கை இடம்பெற வேண்டும்?.
ஒரு குறிப்பிட்ட மிகச்சிறிய பகுதியை எடுத்துக்கொண்டு ஏனைய பகுதிகள் அனைத்தும் ஒரே தடவையில் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.
கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என்று கூறுவார்கள். ஆனால், ஒவ்வொரு விடுவிப்புக்கும் இடையில் இரண்டு அல்லது மூன்று வருடங்களை எடுத்துக்கொள்வார்கள். இது நியாயமில்லை. மக்கள் பாவம். அவர்களை இவ்வாறெல்லாம் ஏமாற்ற வேண்டாம். ஒரே தடவையில் காணிகளை வழங்குமாறு மக்களும் கோரிக்கை விடுக்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## எதிர்பாரா...

சிலையை எடுத்து வருவதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன இவ்வாறு நயினாதீவு நாகவிகாரை விகாராதிபதி ஸ்ரீ நவடகல பதும கீர்த்தி திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
திஸ்ஸ விகாரைக்கு வெளிப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான எதிர்ப்பைத் தொடர்ந்தே, புத்தர் சிலையைக் கொண்டுவருவதற்கு முயற்சி இடம்பெறவில்லை என திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி தெரிவித்துள்ளார். ஆனால், இவர்கள் ஒருபோதும் சொல்வதைச் செய்பவர்கள் அல்லர். இவ்வாறு கூறி மக்களை ஏமாற்றிவிட்டு, நினையாத நேரத்தில் சிலையை எடுத்து வரக்கூடியவர்கள். எனவே, மக்களும் ஊடகங்களும்தான் இந்த விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## திஸ்ஸ...

இடம்பெறவுள்ளது. திஸ்ஸ விகாரையின் முன்றலில் இன்று காலை 8 மணி தொடக்கம் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ள நிலையில், அந்தப் பகுதியில் பொலிஸாரின் கண்காணிப்பும் பிரசன்னமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
போராட்டத்தில், தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-26-66)

## அத்துமீறிய...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் தமிழ்க் கட்சிகள் அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியிருந்தன. இந்தச் சந்திப்பில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லை. மாறாக காட்டிக் கொடுக்கும் செயற்பாடுகளே தமிழ்க் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டன.
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி என்பது பெரும் பிரச்சினையாக உருப்பெற்றுள்ளது. அதற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதற்கு நாங்கள் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டுடன் ஓரணியில் செயற்பட வேண்டும் - என்றார். (அ-ம-113)

## இந்திய...

படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஸ்ரீலங்கா கடற்படையால் நேற்று இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்கள் 11 பேரும், அவர்கள் பயணித்த படகுகள் மற்றும் பயன்படுத்திய மீன்பிடி உபகரணங்கள் சகிதம் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.
தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் வெளியிட்டுள்ளார். மீனவர்களை மீட்கும் நடவடிக்கையில் இந்திய மத்திய அரசாங்கம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-ம-26)

## 11 சதவீதத்தால்...

மின்சாரசபைக்குத்தலைவர்கூட இல்லை. இவ்வாறான நிலையில், அமைச்சரின் பரிந்துரைக்கு அமையவே மின் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இது பாரதூரமான தவறாகும். இந்த நடவடிக்கையை நாங்கள் கண்டிப்போம் - என்றார். (அ-ம-44)

## சரியான...

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் விரைவில் முறைப்படியான அறிவிப்பு வெளியிடப்படும். அம்பாந்தோட்டையில் இருந்தாலும், கொழும்பில் இருந்தாலும் எமது கட்சிக்குரிய ஆலோசனையை வழங்கி கட்சியை மஹிந்த ராஜபக்ச திறம்பட வழிநடத்துவார்.
அரசாங்கத்தின் காலைவாருவதற்கு நாம் முற்படவில்லை. தமது காலை தாமே வாரிக்கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது - என்றார். (அ-ம-44)

## வினைத்திறனான...

2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியில், 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைத் வினைத்திறனாகச் செலவு செய்து, தேசிய ரீதியில் வடமாகாணம் முதலிடம் பிடித்துள்ளது என்று வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.
மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் 2026ஆம் ஆண்டுக்கான கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர்மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் நூறு சதவீதக் கட்டு நிதியையும் நாம் திறைசேரியிடமிருந்து பெற்றுள்ளோம். கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு வரையில் 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைச் செலவு செய்துள்ளோம். பௌதீக முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் நாம் 100 சதவீத இலக்கை எட்டியுள்ளோம். இந்த அடைவின்மூலம் இலங்கையிலுள்ள ஏனைய மாகாணங்களில்நாமே முன்னிலையில் உள்ளோம். இந்த வெற்றியைத் தக்க வைக்க, 2026ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களில் கொள்வனவு தொடர்பான பணிகளை ஆரம்பத்திலேயே தொடங்குவது சிறப்பாக அமையும் - என்றார். (அ-ம-27)


வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

கைதடியில் புதிய வீட்டுடன் கூடிய
1 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 983 1044, 077 069 0896

(CS/59989) J-1

உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்
பிரபல Hotel ஒன்றிற்கு பின்வரும்
வேலையாட்கள் தேவை.

- Waitress (உணவு பரிமாறுபவர்)
- Cook (சமையலாளர்)
- Kitchin Helpers (சமையல் உதவியாளர்)
- Dishwash (பாத்திரம் கழுபுவர்கள்)
- House Keeping (அறை பராமரிப்பாளர்)

தொடர்புகளுக்கு:-
076 077 1020, 070 301 8564

(CS/60356) J-1


## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 12 . 1934



மறைவு
02 . 01 . 2026

### பூமாதேவி மதியாபரணம்

உரும்பிராய் மேற்கினை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பூமாதேவி மதியாபரணம் அவர்கள் நேற்று (02-01-2026) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - ரோசம்மா தம்பதியினரின் பாசமிகு புத்திரியும், காலஞ்சென்ற அம்பலவாணர் மதியாபரணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - செல்லாச்சி தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சத்தியவான், சிவன்யோகம், அருமைத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகநாதன் (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்), சந்திரிகா, மேனகா (முன்னைநாள் ஆசிரியர்) (ஜேர்மன்), ரகுநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மகிந்தன், அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகன்யா, கந்தசாமி (ஓய்வுபெற்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்), கனகசிங்கம் (ஜேர்மனி), திருநிலைநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வினோதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாருகேசி - திவாஹரன் (சிங்கப்பூர்), சாருஜன் - விதுர்ஷிகா (Facility Management Executive, SLIIT NORTHERN UNI), சிந்துஜன் (விரிவுரையாளர், SLIIT NORTHERN UNI), காலஞ்சென்ற விதுசன், சுயோதமி (ஆய்வாளர், Yarl IT Hub), சாரங்கி - கோபிதன், தர்சிகா (மருத்துவர், ஜேர்மன்), யதுசா (மருத்துவபீட மாணவி பேராதனைப் பல்கலைக்கழகம்), பிரணா (மருத்துவபீட மாணவி, லண்டன்), மாதவன் (லண்டன்), அர்யுவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷஜன் (சிங்கப்பூர்), அத்விதன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04-01-2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு

தகவல்: குடும்பத்தினர்
077 844 5373, 077 314 1265

(CS/60358) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.